


www.krishnagiritoday.com

RNI No. TNTAM/25/A1668

# கிருஷ்ணகிரி டுடே

ஆசிரியர்/ வெளியீட்டாளர்/ உரிமையாளர் கே.வி.பாபுகாந்த் (எ) பாபு

: 9003347999. 82482 56995

தருமபுரி - கிருஷ்ணகிரி, திருப்பத்தூர் மாவட்டங்களின் பிரத்யேக நாளிதழ்

◆ கிருஷ்ணகிரி 09.07.2026 வியாழக்கிழமை Volume 01 ◆ Issue 313 ◆ 6 பக்கம் ◆ 500 காசு

# இந்தியா இந்தோனேசியா உறவில் புதிய அத்தியாயம்



*ஜகார்த்தா, ஜூலை 8:*

இந்தியாஇந்தோனேசியா இடையிலான மூலோபாய உறவை அடுத்த கட்டத்திற்கு கொண்டு செல்லும் வகையில், பிரதமர் நரேந்திர மோடி மற்றும் இந்தோனேசிய அதிபர் பிரபோவோ சுபியாந்தோ இடையே நடைபெற்ற உயர்மட்ட பேச்சுவார்த்தைவெற்றிகரமாக நிறைவடைந்தது. இந்த சந்திப்பின் போது பாதுகாப்பு, கடல்சார் பாதுகாப்பு, வர்த்தகம், முதலீடு, டிஜிட்டல் தொழில்நுட்பம், எரிசக்தி, கல்வி மற்றும் மக்கள்-மக்கள் தொடர்பு உள்ளிட்ட பல்வேறு துறைகளில் முக்கிய ஒப்பந்தங்கள் கையெழுத்தாகின.

மூன்று நாடுகள் சுற்றுப்பயணத்தின் முதல் கட்டமாக இந்தோனேசியா சென்றடைந்த பிரதமர் மோடிக்கு சிறப்பான வரவேற்பு அளிக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து நடைபெற்ற இருதரப்பு பேச்சுவார்த்தையில், இந்தோ-பசிபிக் பிராந்தியத்தில் அமைதி, பாதுகாப்பு மற்றும் சுதந்திரமான கடல்சார் போக்குவரத்தை உறுதி செய்வதில் இரு நாடுகளும் இணைந்து செயல்பட உறுதி தெரிவித்தன. கடல்சார் பாதுகாப்பை மேம்படுத்த கூட்டு ரோந்து, தகவல் பரிமாற்றம் மற்றும் பாதுகாப்பு ஒத்துழைப்பை விரிவுபடுத்தவும் முடிவு செய்யப்பட்டது.

வர்த்தக உறவுகளை மேலும் விரிவுபடுத்துவது குறித்தும் இரு தலைவர்களும் விரிவாக ஆலோசனை நடத்தினர். இருதரப்பு வர்த்தக அளவை அதிகரிப்பதற்கான புதிய இலக்குகள் நிர்ணயிக்கப்பட்டதுடன், இந்திய நிறுவனங்கள் இந்தோனேசியாவில் முதலீடுகளை அதிகரிக்கவும், இந்தோனேசிய நிறுவனங்கள் இந்தியாவில் உற்பத்தி மற்றும் உள்கட்டமைப்பு துறைகளில் முதலீடு செய்யவும் ஊக்குவிக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டது.

புதுப்பிக்கத்தக்க எரிசக்தி, சூரிய ஆற்றல், பசுமை ஹைட்ரஜன், டிஜிட்டல் பொருளாதாரம், செயற்கை நுண்ணறிவு மற்றும் நிதி தொழில்நுட்பம் உள்ளிட்ட எதிர்கால வளர்ச்சித் துறைகளிலும் இரு நாடுகள் இணைந்து செயல்பட ஒப்புக்கொண்டன. மாணவர் பரிமாற்றம், திறன் மேம்பாடு, உயர் கல்வி மற்றும் கலாசார ஒத்துழைப்பை வலுப்படுத்துவதற்கான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட உள்ளன.

பேச்சுவார்த்தைக்குப் பிறகு வெளியிட்ட கூட்டறிக்கையில், உலகளாவிய பொருளாதார சவால்கள், விநியோகச் சங்கிலி பாதுகாப்பு மற்றும் பிராந்திய அமைதி ஆகியவற்றில் இந்தியா இந்தோனேசியா இணைந்து செயல்படுவது அவசியம் என இரு தலைவர்களும் வலியுறுத்தினர். இந்தியாவின் 'ஆக்ட் ஈஸ்ட்' கொள்கைக்கும், இந்தோனேசியாவின் பிராந்திய வளர்ச்சி நோக்கத்திற்கும் இந்த ஒத்துழைப்பு புதிய வேகத்தை அளிக்கும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

பிரதமர் மோடி தனது உரையில், இந்தியா மற்றும் இந்தோனேசியா பல நூற்றாண்டுகளாக வரலாறு, கலாசாரம் மற்றும் கடல்சார் வர்த்தகத்தின் மூலம் இணைக்கப்பட்ட நாடுகள் என்றும், தற்போதைய உலக சூழலில் இந்த உறவு மேலும் வலுப்பெறுவது இரு நாடுகளுக்கும் மட்டுமல்ல, முழு இந்தோ-பசிபிக் பிராந்தியத்தின் நிலைத்தன்மைக்கும் முக்கியமானதாக இருக்கும் என்றும் குறிப்பிட்டார். உலகளாவிய முதலீடு, தொழில்நுட்ப வளர்ச்சி மற்றும் பாதுகாப்பு ஒத்துழைப்பில் இரு நாடுகளும் நீண்டகால கூட்டாளிகளாக செயல்பட உறுதி எடுத்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இந்தோனேசிய பயணத்தைத் தொடர்ந்து பிரதமர் மோடி ஆஸ்திரேலியா மற்றும் நியூசிலாந்து நாடுகளுக்கும் பயணம் மேற்கொள்ள உள்ளார். அங்கு பாதுகாப்பு, பொருளாதாரம், முக்கிய கனிம வளங்கள், கல்வி, தொழில்நுட்பம், காலநிலை மாற்றம் மற்றும் சுதந்திர வர்த்தக ஒப்பந்தங்கள் தொடர்பாக உயர்மட்ட பேச்சுவார்த்தைகள் நடைபெறவுள்ளன. இந்த மூன்று நாடுகள் சுற்றுப்பயணம், இந்தியாவின் வெளியுறவுக் கொள்கையில் முக்கிய திருப்புமுனையாகவும், இந்தோ-பசிபிக்பிராந்தியத்தில் இந்தியாவின் செல்வாக்கை மேலும் வலுப்படுத்தும் நடவடிக்கையாகவும் வெளியுறவுத்துறைவல்லுநர்கள் மதிப்பிட்டுள்ளனர்.

சர்வதேச அரசியல் மற்றும் பொருளாதார சூழல் வேகமாக மாறிவரும் நிலையில், இந்த பயணத்தின் மூலம் இந்தியா தனது மூலோபாய கூட்டாண்மைகளை மேலும் விரிவுபடுத்தி, உலகளாவிய வர்த்தகம், பாதுகாப்பு மற்றும் தொழில்நுட்ப ஒத்துழைப்பில் முக்கிய பங்காற்றும் நாடாக தனது நிலையை உறுதிப்படுத்தி வருவதாகவும் அரசியல் பார்வையாளர்கள் கருத்து தெரிவித்து வருகின்றனர்.

## கிருஷ்ணகிரி அருகே அதிர்ச்சி: செங்கல் சூளையில் கொத்தடிமைகளாக அடைக்கப்பட்டிருந்த குழந்தைகள் உட்பட 10 பேர் மீட்பு!



கிருஷ்ணகிரி மாவட்டம் போச்சம்பள்ளி அருகே உள்ள மடத்தானூர் கிராமத்தில், குழந்தை தொழிலாளர்கள் மற்றும் கொத்தடிமைகள் மீட்கப்பட்ட சம்பவம் அப்பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

மடத்தானூர் கிராமத்தில் 50-க்கும் மேற்பட்ட செங்கல் சூளைகள் இயங்கி வருகின்றன. இதில், தமிழ்செல்வன் என்பவருக்குச் சொந்தமான செங்கல் சூளையில், விதிகளை மீறி குழந்தை தொழிலாளர்கள் மற்றும் கொத்தடிமைகள் பணியமர்த்தப்பட்டுள்ளதாக குழந்தை தொழிலாளர் ஆணையத்திற்கு ரகசியப் புகார் கிடைத்தது.

இப்புகாரின் அடிப்படையில், குழந்தைதொழிலாளர் ஆணையர் சங்கர் தலைமையிலான அதிகாரிகள் குழுவினர் மடத்தானூர் கிராமத்தில் உள்ள குறிப்பிட்ட செங்கல் சூளையில் அதிரடி சோதனை நடத்தினர். அப்போது அங்கு கொத்தடிமைகளாக அடைத்து வைக்கப்பட்டு, கடுமையான வேலைகளில் ஈடுபடுத்தப்பட்டிருந்த 3 ஆண்கள், 3 பெண்கள் மற்றும் 4 குழந்தைகள் என மொத்தம் 10 பேரை அதிகாரிகள் பத்திரமாக மீட்டனர்.

மீட்கப்பட்ட 10 நபர்களுக்கும் தேவையான முதலுதவி மற்றும் கவுன்சிலிங் வழங்கப்பட்டது. அதைத்தொடர்ந்து, அவர்கள் அனைவரும் அதிகாரிகளின் பாதுகாப்புடன் அவர்களது சொந்த ஊருக்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.

கடந்த ஆண்டும் இதே மடத்தானூர் கிராமத்தில் உள்ள செங்கல் சூளையிலிருந்து கொத்தடிமைகள் மீட்கப்பட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது. அடுத்தடுத்து இதே கிராமத்தில் இத்தகைய மனித உரிமை மீறல்கள் அரங்கேறி வருவது சமூக ஆர்வலர்களிடையே பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

## தருமபுரி மாவட்ட ஆட்சியர் சரவணன் திடீர் ஆய்வு



தருமபுரி மாவட்டம் பாப்பிரெட்டிப்பட்டி வட்டம் மணியம்பாடி கிராமத்தில் இணைய வழி சான்றிதழ்களில் உள்ள தள்ளுபடி மனுக்கள் குறித்து மாவட்ட ஆட்சியர் சரவணன் நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். இந்த ஆய்வின் போது பாப்பிரெட்டிப்பட்டி வட்டாட்சியர் பார்வதி உள்ளிட்ட தொடர்புடைய அலுவலர்கள் உடனிருந்தனர்

